[1979 மார்ச் 13

Wages of tannery workers.

* Q.No. 372 Thiru N.KITTAPPA: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether settlement has been made regarding the wages of tannery workers in this State about the 16th May 1978; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) மற்றும் (ஆ) ஒரு விவர அறிக்கை *அவை முன்பு வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, இந்தத் தோல் பதனிடும் தொழில் மிகப் பெரிய அளவுக்கு அன்னியச் செலாவணியைச் சம்பாதிக்கும் தொழிலாக இருக்கிறது. இதிலே வேலை செய்யும்படியான தொழிலாளர்கள் சுண்ணாம்பில் கையை வைத்து மிகப் பெரிய இரசாயனப் பொருள்களைக் கையாள்வதால், அவர்கள் கைகள் குஷ்டரோகிகளைப் போல் காட்சி அளிப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, ஒப்பந்தம் ஏற்பட்டாலும் இடையிலே னகயுறைகள் கொடுக்க வசதி செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள், குடியிருப்பு வசதியற்றுத் துன்பப்படுகிற நிலையிருக்கிறது. ஆகவே, ஒப்பந்தத்திற்கு இடையிலே, அவர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தர ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஒப்பந்தம் ஏற்பட்டதைப் பற்றி. அந்த ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தம் ஏற்பட்ட தேதி 17-5-1978; கால அளவு 2 ஆண்டு; ஒப்பந்தம் ஏற்பட்ட விதி, தொழில் தகராறுகள் சட்டத்தின் 12 (3).

திரு.நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, சென்னை நகரிலே குரோம்பேட்டையிலேயிருக்கிற குரோம் லெதர் கார்ப்பரேஷன் 9 மாதமாக மூடப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? அதன் காரணமாக, தொழிலாளர்கள் 9 மாதமாக வேலையில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி வேறு. இதற்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

*.....505-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 மார்ச் 13]

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஒப்பந்தம் படிப்பதற்கு ரொம்ப அழகாக இருக்கிறது. வருஷம் ஒன்றுக்குக் கூலி உயர்வு கிடைக்கிறது. 'டிரஸ்' கிடைக்கிறது என்றெல்லாம் இருக்கிறது. அந்தத் தொழில் திடீர், திடீரென்று செத்துப் பிழைக்கக்கூடிய அளவு இருக்கிறது. அந்த நிலைமையிலே 2, 3 மாதம் மூடப்படு கிறது. மறுபடியும் திறக்கப்படுகிறது. ஆகவே, 'பெர்மனன்ட்' தொழிலாளி இல்லையாதலால் உனக்கு இந்தச் சலுகையெல்லாம் கிடையாது என்ற சூழ்நிலை இருப்பது கனம் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும்—தெரியுமா (சிரிப்பு). ஆகவே, விஷயத் திலே கனம் அமைச்சரவர்கள் இந்த ஒப்பந்தத்தின்படி இந்தச் சலுகையெல்லாம் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மூலக்கேள்வி. ஊதியத்தைப் பொறுத்து, ஒப்பந்தத்தைப் பொறுத்தது.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 373, 374 இரண்டும் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பட்டது.

ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள்.

* வினா எண் 375—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கத் திட்டமுள்ளதா?

(ஆ) காவிரியாற்றுப் பாசனப் பகுதிக்கும் கல்லணை விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிக்கும் இக்குழுக்கள் அமைக்கப்பட உள்ளனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் என்பது மிகவும் முக்கியமானது. முறையாகப் பாசனம் பெற்றதால்தான் நல்ல முறையிலே விளையும் என்கிற அடிப்படையில் காவிரியாற்றுப் பாசன பகுதிக்கும், கல்லணை விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிக்கும், இதை பரிசீலிக்கிறோம் என்று சொல்லப்பட்டது, துரிதமாக ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும், அதற்கு அரசு முயற்சி செய்யுமா? எந்த அடிப் படையில் அந்தக் குழுக்கள் அமைக்கப்படும்? சர்வகட்சி முறையில் எல்லாக் கட்சிகளுக்கும் சரியான அளவு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.